# அரிமேய விண்ணகரம்

**சென்று வணங்கிடுவீர்:** அரிமேய விண்ணகரம் என்னும் திவ்விய தேசம் திருநாங்கூர் திருப்பதிகளுள் ஒன்று. பகவான் விரும்பி எப்போதும் எழுந்தருளி இருக்குமிடம் பரமபதம்; ஸ்ரீவைகுண்டம். அதனை விண் நகரம் (விண்ணகரம்) என்று பெரியோர் கூறுவர். இந்தத் திவ்யதேசமும் பரமபதத்திற்கு ஒப்பாக இருப்பதால் விண்ணகரம் என்று பெயர் பெற்றது. விஷ்ணு க்ருஹம் என்ற வடசொல் விண்ணகரம் என்றாயிற்று என்பாருமுண்டு. ஸ்ரீமந் நாராயணன் பரமபதத்தில் ஸ்ரீதேவி பூதேவியரோடு எழுந்தருளி இருக்கிறான். இங்கும் திருமடந்தை மண் மடந்தை இருபாலும் திகழ அமர்ந்திருக்கிறான். எம்பெருமானுக்கே உரிய 'அரி' என்ற சொல்லைக் கூறி இந்தத் திவ்ய தேசத்தையே அரிமேய விண்ணகரம் என்கிறார் ஆழ்வார்.

# ஸ்தலசயனத்துறைவார்

'பாவமே செய்து பாவியானேன்' என்று வருந்த வேண்டாம். 'செய்த பாவத்திலிருந்து விடுபடுவது எவ்வாறு' என்று இறை வேண்டாம். 'எம்பெருமான் தண்டித்து விடுவானே!' என்று கலங்க வேண்டாம்! அவனது சுதந்திரத் தன்மையை (ஸ்வாதந்திரியத்தைக்) கண்டு அஞ்ச வேண்டாம். அடியார்கள் குன்றனைய குற்றம் செய்யினும், குணமாகக் கொள்பவன் எம்பெருமான்! குற்றம் செய்யாதவர் யார்? குற்றம் செய்திருந்தாலும் அவரும் காப்பாற்றப்பட வேண்டும் என்பவள் திருமகள்! இவளும் எம்பெருமானோடு இருக்கிறாள். 'ஒருவரிடம் குற்றம் காண்பது ஏன்? அதைப் பொறுக்க வேண்டுவது ஏன்?' என்று கூறுபவள் பூமிப் பிராட்டி! இவள் பெருமையே வடிவானவள்! இவளும் எம்பெருமானோடு இருக்கிறாள். இம்மூவரும் தமக்கே உரித்தான வாத்ஸல்ய குணத்தைக் காட்டிக் கொண்டு நம்மைக் காப்

யாற்றுவதற்காகவே இங்கு வந்திருக்க, நம் பாவத்தைக் கண்டு நாம் அஞ்சுவானேன்! வருகிறவர்களுக்கெல்லாம் 'மாசுச:' என்று கூறிக் கொண்டு அமர்ந்திருக்கும் இந்த எம்பெருமானை அடையத் தொடங்கினாலே போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும். அருவினை அகல அரிமேய விண்ணகரம் சென்று வணங்கிடுவோம் வாரீர்!

**ஆடல் வல்லான்:** மிகப் பழைய காலத்தில் கூத்தாடுவது ஒரு பெரிய நிகழ்ச்சி! விழாக் காலங்களிலும் மங்கள நாட்களிலும் கூத்தாடுவது உண்டு. ஆயர்கள் சேரியிலும் கூத்தாடும் நிகழ்ச்சி அடிக்கடி நடைபெறும்! ஆயர்கள் செருக்கு மிகுந்த காலத்தில் குடக்கூத்து ஆடுவார்கள். பலவகைக் கூத்துகளில் இது ஒன்று! தலைமீது நாலைந்து குடங்களை (வரிசையாக) அடுக்கி வைத்துக் கொள்வர். இரண்டு தோள்களிலும் இரண்டு குடங்கள், இருகைகளிலும் இரண்டு குடங்கள்! இத்தனையும் வைத்துக் கொண்டு இசைக்கும் தாளத்திற்கும் ஏற்றவாறு ஆடுவார்கள். சிலர் ஆடிக் கொண்டே குடங்களை மேல் நோக்கிப் போட்டுப் பிடிப்பதும் உண்டு! இந்த ஆட்டத்தை மக்கள் கூட்டம் கூட்டமாகக் கண்டு மகிழ்வார்கள். குடக்கூத்து ஆடுவதில் கண்ணன் பெரும் புகழ் படைத்தவன். ஆதலால் இந்தச் செயலில் மனத்தைப் பறி கொடுத்த ஆழ்வார்கள், குடக்கூத்தன், குடமாடு கூத்தன், குடம் நயந்த கூத்தன் என்றெல்லாம் கூறுவார்கள். 'குடங்கள் எடுத்தேற விட்டுச் கூத்தாட வல்ல எங்கோவே!' என்று அழைக்கிறார் பெரியாழ்வார். அரிமேய விண்ணகரத்தில் எழுந்தருளி இருக்கும் உத்ஸவருக்குக் குடமாடு கூத்தன் என்று திருநாமம்.

**ஒலியும் — ஒளியும்:** இந்நாளில் எங்கு பார்த்தாலும் ஒலிகள்! எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒலி! இசைத் தட்டு ஒலி! ஒலி பெருக்கி வேறு! ஒலிகளின் இடையில் ஒவ்வொரு

வாழும் வாழ்க்கையை நடத்துகிறான். ஒரு நாளேனும் நமக்கு ஓய்வு கிடைக்காதா? தனிமையில் அமைதியாக இருக்க மாட்டோமா! என்று ஏங்கி அமைதியை நாடித் தனிமையை தேடிச் செல்கிறான். ஒலிகளைக் கேளாவிடில் சிலருக்கு வாழ்க்கையே வெறுத்துப் போகும். அவர்களது வாழ்க்கை ஒலிகளோடு ஒன்றிக் கலந்திருக்கும். எம்பெருமான் பரமபதத்தில் எழுந்தருளி இருந்தான்! அங்கும் ஸாமகானம்! பல்லாண்டொலி! தும்புருநாரதர் முதலானோரின் இசையொலி! பிராட்டியரோடு தனிமையில் ஏகாந்தமாக இருக்க பூமியில் ஓரிடத்தைத் தேடினான். திருநாங்கூரில் ஓரிடத்தைக் கண்டான். இயற்கை எழிலில் மனத்தைப் பறி கொடுத்தான்! பிராட்டியரோடு அங்கேயே தங்கி விட்டான். தான் இருக்கும் இடத்திற்கு 'அரிமேய விண்ணகரம்' என்ற பெயரை ஏற்படுத்திக் கொண்டான். நம்மைக் காப்பாற்றி நன்னிலையை அடைவிக்கும் வரை அவனுக்கு அமைதி ஏது? ஒலிகளும் அவனை விடவில்லை! ஒரு பக்கம் வாத்திய ஒலிகள்! மறு பக்கம் வண்டினம் முரலும் ஒலிகள்! எங்கும் அந்தணர்களின் மறையொலி! பெண்களின் சிலம்பார்க்கும் ஒலிவேறு! கடலொலி போன்று எங்கும் ஒலிகள் நிரம்பியுள்ளன. இப்படிப்பட்ட அரியமேய விண்ணகரத்தில் எம்பெருமான் தன் பேரொளியைக் காட்டிக் கொண்டு அமர்ந்திருக்கிறான்! இவ்வாறு ஒலியும் ஒளியும் நிறைந்த இடம் அரிமேய விண்ணகரம்!

**அறியவேண்டிய உண்மை! :** 'நான் யார்?' என்று அடிக்கடி தன்னைப்பற்றியே சிந்திப்பது கலங்கிய நிலை! 'நான் என்னைச் சேர்ந்தவன்' என்று நினைப்பது அறியாமை நிலை! "நான் பகவானைச் சேர்ந்தவன்' என்று தன்னைப்பற்றி உறுதியாக இருப்பது உண்மைநிலை! நாம் அறியவேண்டிய உண்மை இதுவே? பகவானுக்கு அடிமைப் பொருளாக இல்லாவிடில் நமக்கு நன்மை இல்லை; மதிப்பு இல்லை. நறுமணம் பெற்று விளங்குவதால் மலருக்குப் பெருமை!

ஒளிபெற்று விளங்குவதால் மணிக்குப்பெருமை! பகவா னுக்கு சேஷப்பொருளாக இருப்பதினாலேயே நமக்குப் பெருமை!

தானே தன்னையும் தரும் கற்பகமாக இருக்கும் அரிமேய விண்ணகரத்தானை அடைந்து நற்பயன்களை வேண்டிப் பெறுங்கள்! தாகத்தைத் தணித்துக் கொள்ள விரும்பு கிறவன், நல்ல குடி நீர் நிறைந்திருக்கும் குளத்தை விட்டுக் கானல் நீரை நாடி ஓடுவதுண்டா? எங்கெங்கோ மருண்டு ஓடாதீர்! உங்கள் மக்களையும் ஓடவைக்காதீர்!

எந்தத் தெய்வமும் அழியாப் பயனைத் தரவல்லது அன்று. இந்த உண்மையை அறிந்து கொள்ளுங்கள். மறைகளைக் கற்றுப்பொருள் உணர்ந்த நான்முகனும் பகவானுக்கு அடிமை! 'எம்பெருமான் (ஸ்ரீமந்நாராயணன்) ஒருவனே நம் தலைவன்!' என்று தெளிந்த ஞானங்கொண்ட சிவனும் பகவானுக்கு அடிமை! திருநாரணன் அருளால் ஐராவதத்தின் மீது அமர்ந்து செல்லும் சிறப்புடைய இந்திரனும் பகவானுக்கு அடிமை! நீங்களும் திடமான பக்தியோடு பகவானையே நம்பி வணங்கினால் பயன் பெறு வீர்கள்' என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

**வாழு மடியார் மடநெஞ்சே! நம்மளவோ**
**தாழும் சடையோன் சதுமுகத்தோன்—பாழிக்**
**கரிமேய விண்ணகரக் காவலோன் கண்டா**
**யரிமேய விண்ணகரத் தார்க்கு**

நூற்றெட்டு திருப்பதி அந்தாதி 32

**நெஞ்சே வணங்கு:** அரிமேய விண்ணகரம் சென்று அந்த எம்பெருமானைப் பற்றி ஏதேனும் சொல்லிக் கொண்டு பகவானை ஸேவிக்க வேண்டும் என்று நினைப்பவர்கள்

(பெரிய திருமொழி 3-10) 'திருமடந்தை' என்று தொடங்கும் பதிகத்தைச் சொல்லிக்கொண்டே ஸேவிக்க லாம். அவ்வாறு முழுதும் சொல்ல இயலாதவர்கள், இந்தப் பாசுரத்தைச் சொல்லலாம்.

**கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை**
**காமருசீர் முகில் வண்ணன் காலிகள் முன்காப்பான்**
**குன்றதனால் மழைதடுத்துக் குடமாடு கூத்தன்**
**குலவுமிடம் கொடிமதில்கள் மாளிகை கோபுரங்கள்**
**துன்றுமணி மண்டபங்கள் சாலைகள் தூமறையோர்**
**தொக்கீண்டித் தொழுதியொடு மிகப்பயிலும் சோலை**
**அன்றலர்வாய் மதுவுண்டங்களி முரலு நாங்கூர்**
**அரிமேயவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே!**

தன்னை நெருங்கி வந்த கன்று வடிவாய அசுரனைப்பிடித்து, விளாமரத்தின் வடிவாய் நின்ற அசுரன் மீது எறிந்து இருவரையும் ஒரே செயலால் அழித்தவனும், கோவர்த்தன மலையைக் குடையாகப்பிடித்து மழையைத்தடுத்து ஆயர் பாடியைக் காத்தவனும், மிகவும் அருமையாகக் குடக்கூத்து ஆடினவனுமாகிய கண்ணன் உவந்திருக்குமிடம் அரிமேய விண்ணகரம். கொடியணி நெடுமதின்; கோபுரங்கள், மாட மாளிகைகள் நிறைந்திருப்பதும், மறையோர் நிறைந்து கூடி வாழுமிடமாக இருப்பதும், சோலை மலர் வண்டினங்கள் தேன் பருகி இசை பாடும் இடமாக இருப்பது மான திருநாங்கூர் சென்று, ஏ!நெஞ்சே! அரிமேய விண்ண கரத்தை வணங்கு.

—O—